Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 28, 2023

வியாழக்கிழமை டிசெம்பர் 28, 2023 | ஒளி: 09 கதிர் 159 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# 'யுக்திய' மீண்டும் ஆரம்பம்



போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்வதற்காக முன்னெடுக்கப்படும் 'யுக்திய' சுற்றிவளைப்பு புதன்கிழமை (27) முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜப்பான் நிதியமைச்சர் ஜனவரியில் வருகிறார்



ஜப்பான் நிதி அமைச்சர் சுனிசி சுஸூகி (Shunichi Suzuki) உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் அவர் நாட்டுக்கு வரவுள்ளதாக ஜப்பான் தூதரகத்தின் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அரச ஊழியர்களின் விடுமுறை

# குறைப்புக்கு எதிர்ப்பு

**இந்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டால் கடுமையான தொழில்முறை நடவடிக்கை எடுக்கப்படும்**

அரச ஊழியர்களின் விடுமுறை எண்ணிக்கையை 45இல் இருந்து 25 ஆக குறைக்கும் பிரேரணையை எதிர்ப்பதாகத் தொழிலாளர் போராட்ட மையம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரேரணையை உடனடியாக வாபஸ் பெறுமாறு நிதியமைச்சிடமும் அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுக்கப்படும் என அந்த நிலையத்தின் செயலாளர் தம்மிக்க முனசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# "அடுத்த தேர்தலிலும் அதிகாரத்தை கைப்பற்றும்"

**கட்சியில் இருந்து விலகியவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுகின்றனர். அந்த விடயங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன**

**வரிகளை நீக்க முடியாது. வரிகள் இருக்கும். அதாவது மக்கள் நியாயமான வரி முறையை அறிமுகப்படுத்த வேண்டும்**

அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தை அரசாங்கம் பெறுவது உறுதியாகியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஆட்சியைப் பிடிக்கும் வரை எதிர்க்கட்சிக்கு செல்வதோ அல்லது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமையைப் பெறுவதோ தமது எதிர்பார்ப்பு இல்லை என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். "கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பம்" கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின் இரண்டாம் நாள் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஒரு கைதிக்கு மூளைக்காய்ச்சல்

**வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு கைதிகள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்**

மாத்தறை சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் ஒருவருக்கு மூளைக்காய்ச்சல் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதனால் மூளைக்காய்ச்சல் குறித்து மக்கள் தேவையில்லாத அச்சம் கொள்ள வேண்டாமென சுகாதார அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் திடீரென சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாத்தறை சிறைக் கைதிகள் நால்வரின், உயிரியல் மாதிரிகள் பரிசோதனைக்காக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

# புலிகளின் சின்னம்: இளைஞனுக்கு பிணை



■ நிதர்ஷன் வினோத்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது படம் மற்றும் புலிகளின் சின்னம் பொறித்த ரிசேர்ட் அணிந்து மாவீரர் தினத்தில் பங்கெடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் புதன்கிழமை (27) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# டெங்கு தொற்றிய இளைஞன் மூளை சாவடைந்து மரணம்

**வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளார்**

■ எம். றொசாந்த்



டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான இளைஞன், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள சம்பவமொன்று புதன்கிழமை (27) பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகி , யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மூளை சாவடைந்துள்ளது. எனினும், அவருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

# போதகர் ஜெரோமுக்கு விளக்கமறியல் நீடிப்பு



மதங்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு, மதக் கலவரத்தை ஏற்படுத்த முயன்றார் என குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள போதகர் ஜெரோம் கிறிஸ்டோபர் பெர்னாண்டோவின் விளக்கமறியல் உத்தரவு எதிர்வரும் 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவைக் கொழும்பு மேலதிக நீதவான் திருமதி ரஜிந்த ஜயசூரிய, புதன்கிழமை (27) பிறப்பித்தார்.

சர்ச்சைக்குரிய அறிக்கைகள் அடங்கிய இறுவெட்டை அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# "மொட்டு முட்டு கொடுக்காது ரணிலால் வெல்ல முடியாது"

■ நிதர்ஷன் வினோத்

தாமரை, மொட்டை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி ரணில் விக்ரமசிங்கவினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாது என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்



**" மொட்டுக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவிற்கு சாதகமாக அமைந்தால் மாத்திரமே அவரால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும்**

தொடர்ச்சி P2

# 4,500 துப்பாக்கி ரவைகள் மீட்பு



■ சண்முகம் தவசீலன்

வலைஞர்மடம் பகுதியில் உள்ள வயல் காணி ஒன்றில் T- 56 வகை துப்பாக்கி ரவைகள் 4,500 புதன்கிழமை (27) மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வலைஞர்மடம் பகுதியில் கிறிஸ்தவ தேவாலய வீதியிலுள்ள வயல் காணி ஒன்றில் குறித்த காணி உரிமையாளர் காணியில் மண்ணை அகழ்ந்தெடுக்கும் போது துப்பாக்கி ரவை பெட்டிகள் இருந்ததை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து அப்பகுதியில் உள்ள கடற்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பின்னர் முல்லைத்தீவு பொலிஸார்

தொடர்ச்சி P2

# "விலைபோன தமிழ் தரப்புகளே தமிழ் வேட்பாளரை கோருகின்றன"



■ வா.கிருஸ்ணா

தமிழர்களின் அரசியல் உரிமையினை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயுள்ள தமிழ் தரப்புகள்தான் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று கோரிவருவதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் ஒரேயொரு தெரிவுதான் இருக்கின்றது. இந்த தேர்தலை பகிஷ்கரிப்பதாகும். அதனையே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இரண்டு மரங்கள் முறிந்து விழுந்ததில் 2 பேருக்கு காயம்: 7 வாகனங்களுக்கு சேதம்

■ ஷேன் செனவிரத்ன



கண்டி அஸ்கிரிய திலக் ரத்நாயக்க மாவத்தையில் வளர்ந்திருந்த அரச மரம் மற்றும் மனோரஞ்சிதம் மரம் ஆகிய இரண்டு மரங்களும் முறிந்து விழுந்தமையால், அந்த வீதியில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி உள்ளிட்ட எட்டு வாகனங்கள் சேதமடைந்துள்ளன. கடும் காயங்களுக்கு உள்ளான இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கண்டி பொலிஸார் தெரிவித்தனர். கண்டி மாநகரில் புதன்கிழமை (27) முற்பகல் 11 மணியளவில் பெய்த கடும் மழையினால், பொலிஸ் விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக, பொலிஸ் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு திரும்பும் முற்சந்தியில் இருந்த இவ்விரு மரங்களும் ஒரே நேரத்தில் வீதியில் சரிந்துவிட்டுள்ளது.

அப்போது முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகி, கண்டி தேசிய வைத்திசாலையில் அனுமுதிக்கப்பட்டுள்ளனர். அந்த வீதியின் ஓரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏனைய ஏழு வாகனங்களும் கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இந்த மரங்களின் வேர்கள் செத்துவிட்டதாக அதிகாரிகளின் கவனத்துக்கு தாங்கள் ஏற்கெனவே கொண்டுவந்திருந்தோம் என அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அடுத்த தேர்தலிலும் அதிகாரத்தை கைப்பற்றும்”



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

கேள்வி: - அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு, கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பீர்களா?

பதில்: அப்படி எதுவும் இல்லை. அமைப்பாளர்களின் தவறில்லை. தேர்தலும் உண்டு.

கேள்வி: - கட்சியை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன?

பதில்: - கட்சியில் இருந்து விலகியவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுகின்றனர். அந்த விடயங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்று நினைக்கிறேன்.

கேள்வி: - இந்த நாட்களில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

பதில்- இந்த அரசாங்கம் செய்த சிறந்த பணியாக நான் கருதுகிறேன். போதைப்பொருளால் இந்த நாடு அழிந்து வருகிறது.

கேள்வி: - எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க நீங்கள் தயாராகி வருவதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?

பதில்: இதுவரை அப்படி ஒரு கதை இல்லை. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது எங்கள் நம்பிக்கை. எதிர்க்கட்சிக்கு செல்லும் எதிர்பார்ப்ப இல்லை.

கேள்வி: எதிர்காலத்தில் வரி குறைக்கப்படுமா? அதிகரிக்குமா?

பதில்: - வரிகளை நீக்க முடியாது. வரிகள் இருக்கும். அதாவது மக்கள் நியாயமான வரி முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்றார்.

# ‘யுக்திய’ மீண்டும் ஆரம்பம்

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சகலரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தும் வரையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் திங்கட்கிழமை (25) ,செவ்வாய்க்கிழமை (26) யுக்திய சுற்றிவளைப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் சின்னம்: இளைஞனுக்கு பிணை

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவரது புகைப்படம் தாங்கிய ரிசேர்ட்டை அணிந்து கொண்டு மாவீரர் தினத்தில் பங்கு பற்றிய நிலையில், அன்றைய தினமே இராணுவத்தினரால் குறித்து இளைஞர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த இளைஞர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன், இளைஞரை விடுவிப்பதற்குச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை மன்றில் தாக்கல் செய்திருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞனைப் பிணையில் விடுவிப்பதற்குச் சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த இளை ஞனை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# ஒரு கைதிக்கு மூளைக்காய்ச்சல்

மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த வாரம் சுகயீனமடைந்த குறைந்தது 17 கைதிகள், இதேபோன்ற அறிகுறிகளைக் காட்டிய பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என முன்னர் சந்தேகிக்கப்பட்டது. பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவருக்கு மாத்திரமே மூளைக்காய்ச்சல் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என சிறைச்சாலை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மூளைக் காய்ச்சலால் சந்தேகிக்கப்படும் ஒரு கைதி இறந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டது. இந்நிலைமை காரணமாக, சிறைச்சாலைகள் திணைக்களம் மாத்தறை சிறைச்சாலையில் கடுமையான சுகாதார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியதுடன் புதிய கைதிகளை ஏற்றுக்கொள்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு கைதிகள் தீவிர சிகிச்சை பிரிவில் (ICU) சிகிச்சை பெற்று வருவதாகவும், மற்றையவர்கள் சாதாரண விடுதிகளில் மருத்துவச் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாத்தறை சிறைச்சாலையின் கைதிகள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# போதகர் ஜெரோம்க்கு விளக்கமறியல் நீடிப்பு

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் உண்மைகளை முன்வைத்ததுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில் சர்வதேச அரசியல் மற்றும் மத ஒருமித்த சட்டத்தின் கீழ் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தது.

# 4,500 துப்பாக்கி ரவைகள் மீட்பு

**சம்பவ இடத்திற்கு வருகைதந்த கடற்படையினர் துப்பாக்கி ரவைகள் அடங்கிய பெட்டிகளை மீட்டெடுத்துள்ளனர்**

சம்பவ இடத்திற்கு வருகைதந்து துப்பாக்கி ரவைகள் அடங்கிய பெட்டிகளை மீட்டெடுத்துள்ளனர். T-56 வகை துப்பாக்கி ரவைகள் அடங்கிய ஆறு பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 4,500 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த துப்பாக்கி ரவைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் ஒப்படைக்க ஏற்பாடுகள்



செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# டெங்கு தொற்றிய இளைஞன் மூளை சாவடைந்து மரணம்

கடந்த திங்கட்கிழமை (25) அன்று 11 மாத சிசுவொன்று டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளதுடன், டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவி கடந்த சனிக்கிழமை (23) உயிரிழந்தார். அவருக்கு வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தன்னுடைய மகளின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

# குறைப்புக்கு எதிர்ப்பு...

அரசாங்க ஊழியர்களுக்கு விடுமுறை என்பது சலுகை என்று கூறும் அவர், எவ்வித விசாரணையும் இன்றி விடுமுறையைக் குறைக்க முன்வருவது மக்களின் உரிமைகளை மீறும் செயலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டால் கடுமையான தொழில்முறை நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

# “விலைபோன தமிழ் தரப்புகளே தமிழ் வேட்பாளரை கோருகின்றன”

மட்டு.ஊடக அமையத்தில், புதன்கிழமை (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மிழ் அரசியலில் வரப்போகின்ற ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கின்ற கதை ஒன்று ஒரு சிலரால் பரப்பப்படுகின்றது. அந்த விடயம் தொடர்பாக ஒரு சில தரப்புகள் பெயர்களை கூட முன்மொழிந்திருக்கின்றார்கள் குறிப்பாக சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுடைய பெயர் தானாகவே வந்து முன்மொழிந்திருக்கின்றார்.

அனைத்துக் கட்சிகளும் இணங்கினால் தான் ஒரு வேட்பாளராக வர தயார் என்று ஏனையவர்கள் ஒரு வேட்பாளர் கட்டாயம் நிறுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. முக்கியமாக நான் நினைக்கின்றேன் ஈ.பி.ஆர்.எல் தரப்பின் தலைவர் அந்த அணியை சார்ந்தவர்கள் மற்றும் இன்னுமோர் அணி மனோகணேசன் அவர்களை நிறுத்த வேண்டும் என்றும் கூறியிருக்கின்றார்கள். முதலாவதாக இந்த ஜனாதிபதி தேர்தல் போட்டியிட்டு வெல்லக்கூடிய தரப்பு சிங்கள தரப்பு. அதில் நான் நினைக்கின்றேன். எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. அந்த சிங்கள தரப்பு யாராக இருந்தாலும் கடந்த காலங்களில் தமிழ் மக்களினுடைய அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட விடயமாக இருக்கலாம், பொறுப்பு கூற சம்பந்தப்பட்ட விடயமாக இருக்கலாம் ஏன் தமிழ் மக்களுடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அல்லது பாதுகாப்பு சம்பந்தமின்மை தொடர்பான இன்று இருக்கக்கூடிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஊடாக

> **ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தினால், முதல் வட்டத்தில் ஒரு சிங்கள வேட்பாளர் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும். இரண்டாம் வாக்கெடுப்பில் வேட்பாளர் தெரிவு செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்கள் பேரம் பேசுவதற்கு முன் வருவர். அப்போது நாங்கள் பேரம் பேசி ஒரு தரப்பினை ஆதரிப்பதற்கான நிலைப்பாட்டை எடுக்கலாம்**

வரக்கூடிய மோசமாக நிலையாக இருக்கலாம்.

அவை மட்டுமன்றி அரசியல் கைதிகளினுடைய நிலையாக இருக்கலாம் எங்களுடைய சொந்த காணிகளை பறிக்கின்ற விடயங்களாக இருக்கலாம் தாயகத்தில் தொடர்ச்சியாக சிங்களமைப்படுத்துகின்ற வேலை திட்டங்களாக இருக்கலாம் இது அனைத்து சம்பந்தமாக அந்த சிங்கள தரப்பினரால் நிறுத்தக்கூடிய அனைத்து தரப்புகளும் தமிழ் மக்களின் பக்கமாக இருந்தது கிடையாது என்றார்.

தீர்வு சம்பந்தப்பட்ட விடயத்தில் அனைவரும் ஒற்றைய ஆட்சியை வலியுறுத்துகின்ற நிலைப்பாட்டிலே தொடர்ச்சியாக இருக்கின்றனர். வெளிப்படையாகவே வந்து 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதாக இருப்பதாக இருந்தாலும் சரி அல்லது ஒற்றைய ஆட்சிக்குள் மட்டும் தான் தீர்வு அல்லது இருக்கும் 13ஆம் திருத்தத்தின் பெயரில் இருக்கின்ற விடயங்களில் கழித்து சொல்லுகின்ற விடயம் மட்டும்தான் இருக்கின்றது.

இவ்வாறான ஒரு சூழலில் தமிழ் மக்களினுடைய வாக்குகள் இந்த தரப்புக்கு போக முடியாது என்கின்ற ஒரு முடிவில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என்பது மிகத் தெளிவு. சிங்கள தரப்பில் இனிமேலும் தொடர்ச்சியாக வாக்களித்து நாங்கள் ஏமாறக்கூடாது என்கின்ற ஒரு தெளிவான செய்தியை இந்த தேர்தலில் தமிழ் மக்கள் உலகத்திற்கு காட்ட வேண்டும் என்கின்ற உறுதியான நிலைப்பாட்டோடு இருக்கின்றனர். அந்த ஒரு பின்னணியில் தான் இன்று இந்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்துகின்ற கதை ஒன்று திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இதனுடைய உண்மையான நோக்கத்தினை நான் தெளிவாக பதிவு செய்ய விரும்புகின்றேன். அதில் ஒரு சிலர் மிகத் தெளிவாக வெளிப்படையாகவும் கூறி இருக்கின்றனர்.

ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தினால், முதல் வட்டத்தில் ஒரு சிங்கள வேட்பாளர் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும். இரண்டாம் வாக்கெடுப்பில் வேட்பாளர் தெரிவு செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்கள் பேரம் பேசுவதற்கு முன் வருவர். அப்போது நாங்கள் பேரம் பேசி ஒரு தரப்பினை ஆதரிப்பதற்கான நிலைப்பாட்டை எடுக்கலாம். ஆதரிப்பது தான் அவர்களுடைய நோக்கம். அதனை நாங்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் வேட்பாளரை நிறுத்துவது என்று சொல்கின்ற உத்தி இறுதியில் ஒரு சிங்கள தரப்பை நான் இவ்வளவு காலமும் கூறிக் கொண்டு வந்த அனைவரும் எமது அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட விடயமாக இருக்கலாம் பொறுப்புக் கூறுகள் சம்பந்தமான விடயமாக இருக்கலாம் எங்களுடைய மண் திட்டமிட்டு பறிபோகின்ற நிலைமையை உருவாக்கின தரப்பாக இருக்கலாம் அல்லது ஆதரிக்கின்ற சிறப்பாக இருக்கலாம் அப்படித்தான் இன்று நிலைமை இவை அனைத்தும் சிங்கள வேட்பாளர் யாராக இருந்தாலும் அதுதான் நிலைப்பாடாகும் என்றார்.



# “மொட்டு முட்டு கொடுக்காது ரணிலால் வெல்ல முடியாது”

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும், “தற்போதைய சூழ்நிலையில் 2024ஆம் ஆண்டு எந்த தேர்தல் எப்போது நடக்கும் என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது.

முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடாத்துவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று அதில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தற்போதைய ஜனாதிபதியைத் தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதிக்க மாட்டார்கள்.

இதனால், ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் நடக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது. அப்படி நடந்தால் கூட நான்கு பிரதான கட்சிகளிலும் முக்கியமானவர்கள் வேட்பாளர்களாகக் களமிறங்கக் கூடும்.

அவ்வாறு களமிறங்கினால் தனி ஒருவரினால் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை

> **ஜனாதிபதி தேர்தல் நடந்தால் கூட நான்கு பிரதான கட்சிகளிலும் முக்கியமானவர்கள் வேட்பாளர்களாகக் களமிறங்கக் கூடும். அவ்வாறு களமிறங்கினால் தனி ஒருவரினால் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும்**

பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும் அவ்வாறு இருக்கும்போது ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவாரா? என்ற கேள்வி எழுகின்றது.

ரணில் ஜனாதிபதியாக வரவேண்டுமாக இருந்தால் மொட்டுக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவிற்கு சாதகமாக அமைந்தால் மாத்திரமே அவரால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும்” எனவும் தெரிவித்துள்ளார்.



## உருளைக்கிழங்கு விதைகள் தொடர்பாக

# “முடிவு எட்டப்படும்”

யாழ்ப்பாணம்- குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகள் தொற்றுக்குள்ளானமை தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று விஜயம் செய்தது.

விவசாய அமைச்சு மற்றும் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் உயரதிகாரிகள் குறித்த குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ



பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்கு உள்ளாமையினால் பழுதடைந்திருந்தமை டிசெம்பர் 17ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்கு தொடர்பாக ஆராயக் கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று விஜயம் செய்து பார்வையிட்டுள்ளது.

விவசாய அமைச்சின் விவசாயத் தொழில்நுட்ப பணிப்பாளரும் நவீனமயமாக்கல் திட்டம் பிரதிப்பணிப்பாளருமாகிய அனுர வியதுங்க, வடமாகாண விவசாய நவீனமாக்கல் திட்டத்தின் பிரதி மாகாண திட்டப்பணிப்பாளர் V.விஜிதரன், விவசாய விஞ்ஞானி W.D.லெஸ்லி நவீன மயமாக்கல் திட்ட உள்ளக கணக்காய்வாளர் W.A.G.வீரசிங்க, யாழ்ப்பாண உருளைக்கிழங்கு நவீன மயாக்கல் திட்ட சங்கத்தின் தலைவர் S.துசியந்தன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

தேசிய தாவர தடுப்பு காப்பு சேவையின் ஆலோசனையின் பின்னர் உருளைக்கிழங்கு விதைகள் தொடர்பாக முடிவு எட்டப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## திருட்டுடன் தொடர்புடைய பெண் உட்பட எழுவர் கைது



நிதர்ஷன் வினோத்


வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேரை காங்கேசன்துறை குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

திருட்டில் ஈடுபட்ட பிரதான சந்தேகநபர் 19 வயதான போதைக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளதுடன், திருட்டில் ஈடுபட்ட ஒருவர், நகை அடகு வைத்தவர், நகையை உடமையில் வைத்திருந்தவர்கள் என பெண்ணொருவர் உள்ளிட்ட எழு பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## விபத்து ஏற்படுத்திய சாரதி உயிர் மாய்ப்பு



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் விபத்தொன்றை ஏற்படுத்திய முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் தவறான முடிவெடுத்து தன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை (26) பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம்-குப்பிளான் பகுதியில் திங்கட்கிழமை (25) இரவு விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியின் சாரதி, விபத்து இடம்பெற்ற இடத்திலேயே முச்சக்கரவண்டியை விட்டு தப்பி சென்றுள்ளதுடன், செவ்வாய்க்கிழமை (26) தனது வீட்டுக்கு அருகில் தன் உயிரை மாய்த்துகொண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

கட்டுவான் மேற்கை பகுதியை சேர்ந்த, மூன்று பிள்ளைகளின் தந்தையான சந்திரசேகரம் மயூரன் (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரிசியுடன் நடுவீதியில் புரண்டது அரிசிலொறி

நவி

திருப்பிவிடப்பட்ட அரிசி லொறியொன்று, வீதியிலேயே புரண்ட சம்பவமொன்று ஹெம்மாத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில், செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவையில் இருந்து நுவரெலியாவுக்கு அரிசி மூடைகளை ஏற்றிச் சென்ற கெண்டனர் ரக லொறியே இவ்வாறு புரண்டுள்ளது.

கம்பளை நகரில், செவ்வாய்க்கிழமை (26) இரவு பெரஹரா இடம்பெற்றது. இதனால், பிரதான வீதியில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலிஸார், அந்த லொறி உள்ளிட்ட வாகனங்களை கம்பளை-அம்புலுவாவ பிரதான வீதிக்குத் திருப்பிவிட்டனர்.

அவ்வாறு திருப்பிவிடப்பட்ட லொறி, ஹெம்மாத்தகவை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது, அம்புலுவாவ



மூன்றாவது கட்டை பகுதியில் வைத்து, நடுவீதியில் வைத்தே புரண்டுள்ளது. வாகனத்தில் பிரேக் இன்மையால் லொறியை மண்மேட்டில் சாரதி மோதியுள்ளார். இதனால், அந்த லொறி, நடுவீதியிலேயே புரண்டுள்ளது. இல்லையேல் அருகில் இருக்கும் பள்ளத்தில் பாய்ந்திருக்கும் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

சாரதியும் உதவியாளரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என தெரிவித்த ஹெம்மாத்தகம பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## சிறுமியுடன் சென்ற இளைஞன் மீது தாக்குதல்

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயது சிறுமியை அழைத்துச்சென்ற 18 வயது இளைஞனை மக்களால் பிடித்துத் தாக்கிய சம்பவம் செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா- சூரங்கள் பகுதியில் வசித்து வந்த 14 வயதுடைய மாணவி ஒருவரை நெடுத்தீவு பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் காதலித்து, திருமணம் செய்வதற்காக சிறுமியை குருநாகல் பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார். இதன்போது, அப்பகுதியில் உள்ளவர்கள் குறித்த இளைஞரையும் சிறுமியையும் விசாரித்துள்ளனர்.

இதில், சிறுமியை பெற்றோர்களுக்கு தெரியாமல் அழைத்து வந்தமை தெரியவந்ததையடுத்து, சிறுமியின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தி இளைஞனைத் தாக்கியதாகவும் தெரிய வருகின்றது.

பெற்றோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து இளைஞரைக் கைது செய்து, சட்ட வைத்திய அதிகாரியிடம் சோதனைக்காகக் கொண்டு சென்றபோது இளைஞன் தாக்கப்பட்டுள்ள்ளார். இதனையடுத்து குறித்த இளைஞரை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் 14 வயது சிறுமியை சட்ட வைத்திய நிபுணரின் அறிக்கைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவாதிரை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய மார்கழி திருவாதிரை உற்சவம் புதன்கிழமை (27) காலை இடம்பெற்றது. அன்றைய தினம் காலை 6.45 மணியளவில் வசந்த மண்டபப் பூசை நடைபெற்றுள்ளதுடன், பின்னர் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து காலை 7.15 மணியளவில் வெளி வீதியில் எழுந்தருளினார்.







## கதிர்காம விகாரையின் பிரதான பூசகர் கைது

வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காமம் விகாரைக்கு காணிக்கையாக செலுத்தப்பட்ட 38 பவுண் தங்க தகட்டை தவறாக வைத்தமைக்காக விகாரையின் பிரதான பூசகர் சோமிபால டி ரத்நாயக்க கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

களஞ்சிய காப்பாளராக பணியாற்றிய சுட்டி கபுவா எனப்படும் சமன் பிரியந்த, கடந்த 19ஆம் திகதி சட்டத்தரணி ஊடாக திஸ்ஸமஹாராம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே ரத்நாயக்க கைது செய்யப்பட்டுள்ளார் என அறியமுடிகின்றது.

## நெல் மூடைகள் திருட்டு

அம்பாறை - சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடங்கா 2 கிராமசேவையாளர் பிரிவில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 10 நெல் மூட்டைகள் மற்றும் 2 பசளை மூடைகளை கதவை உடைத்துத் திருடப்பட்டுள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (26) பதிவாகியுள்ளது. இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸாரும் விரைந்து மேலதிக விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## கைதிகளின் பிள்ளைகளுக்கு உபகரணங்கள்

ரீ.எல்.ஜவ்பர்கான்

சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளின் பிள்ளைகளுக்குப் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை சிறைச்சாலைகள் ஐக்கியம் அமைப்பு மேற்கொண்டிருந்தது.

மட்டக்களப்பு சிறைச்சாலை ஐக்கியம் பணிமனையில் கிழக்கு மாகாண தலைவர் போதகர் எஸ்.தயாசீலன் தலைமையில் புதன்கிழமை (27) நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன், மட்டக்களப்பு சிறைச்சாலை சிறைக் கைதிகள் நலன்புரிச்சங்க தலைவர் எஸ்.ராஜன், சிறைச்சாலை அதிகாரிகள்,



சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைவாசம் அனுபவிக்கும் கைதிகளின் குடும்ப உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது, பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன், சுமார் 10 இலட்சம் ரூபாய் பெருமதியான பாடசாலை உபகரணங்கள் பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒசுசல கிளை திறக்க ஏற்பாடு

எம்.எஸ்.எம்.ஹனீபா

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசுசல) கிளை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப், புதன்கிழமை (27) தெரிவித்துள்ளார். “இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச ஒசுசல கிளையொன்று இல்லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது நாடு பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்து களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது” என தெரிவித்துள்ளார்.

## சுழல் காற்றால் வீடுகள் சேதம்; தம்பலகமம் மக்கள் கவலை

ஹஸ்பர்

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் புதன்கிழமை (28) வீசிய சுழல் காற்று காரணமாக தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு கிராமசேவகர் பிரிவின் பத்தினிபுரம், இக்பால் நகர் முதலான பகுதிகளில் சுமார் ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளுக்கும், கடை ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சிலருக்கு காயங்களும் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் வீடுகளின் கூரைகள் மற்றும் பலன் தரும் மரங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளதுடன், குடியிருப்பு பகுதிகள் சேதமடைந்துள்ளதால் அடுத்த மழை பெய்தால் எங்கே செல்வது எனவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருமாறும் பதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# செல்வாக்கைப் பேணும் முகமூடியாக அமைந்து விடக்கூடாது

நாட்டின் பல பாகங்களிலும் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். ஏழு நாட்கள் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கை இரண்டொரு நாட்களுக்குப் பின்னர், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "யுக்தியா" என்ற தேடுதல் நடவடிக்கையின் ஊடாக, இதுவரை 13,666 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்புகள் எவ்விதமான முன்னறிவித்தலும் இன்றியே முன்னெடுக்கப்படும். எனினும், "யுக்தியா" முன்கூட்டிய அறிவிப்புடன் முன்னெடுக்கப்பட்டது. இது, பெரும் முதலைகளைத் தப்பவிட்டு, சிறு, சிறு மீன்களைப் பிடிக்கும் சூட்சுமமான நடவடிக்கையென விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

"யுக்தியா"வின் ஊடாக பாதாள உலகக் குழுக்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் பெறுமதியான சொகுசு வீடுகள், வாகனங்கள் உள்ளிட்ட பெருந்தொகையான சொத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

போதைக்கு அடிமையான ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட பணியகம் தெரிவித்திருந்தது. பாதாள உலகமும் போதைப்பொருள் கடத்தலும் இந்நாட்டுக்கு இரண்டு பெரிய அழிவுகளாகும். அந்த ஆபத்தின் தீவிரத்தை உணராத யாரும் இந்த நாட்டில் இருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை.

எனினும், இதற்கு முன்னரும் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிகிறோம். போதைப்பொருள் ஒழிப்பும் பாதாள உலக அடக்குமுறையும் எந்தவோர் அரசியல்வாதியும் அரசாங்கமும் தமது பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கும் மக்கள் மத்தியில் குறைந்து வரும் தமது செல்வாக்கைப் பேணுவதற்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு நல்ல முகமூடியாகும்.

இதுபோன்ற சுற்றிவளைப்பு வலையில் சிக்குவது உண்மையான போதைப்பொருள் வியாபாரிகள் அல்ல, சிறிய அளவில் போதைப்பொருள் விற்பனை செய்வோர் என்பது இரகசியமல்ல. ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான 'நீதி' நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டாலும், உண்மையான போதைப்பொருள் பிரபுக்களைப் பிடிப்பது எளிதான காரியம் அல்ல.

பிற வளமான நாடுகளில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலகத்தையும் முக்கிய புள்ளிகள் நடத்தி வருகின்றனர். அவர்களில் சிலர் இலங்கை பொலிஸாரின் சில உயர் அதிகாரிகளின் நெருங்கிய சகாக்கள் என தெரியவந்த சம்பவங்களும் உண்டு.

இந்த நாட்டில் போதைப்பொருள் கடத்தலும் பாதாள உலகமும் அரசியலில் பலம் வாய்ந்த சிலரின் ஆசியிலும் பாதுகாப்பிலும் இயங்குவது உலகறிந்த இரகசியம். மக்களுக்கு உண்மையான நீதி கிடைக்க வேண்டுமானால், பாதாள உலகத்தின் பிதாமகன்களும், போதைப்பொருள் கடத்தலின் உச்ச சுறாக்களும் வலையில் சிக்க வேண்டும்.

போதைப்பொருள் வியாபாரிகளைக் கைது செய்து சிறையில் அடைப்பதன் மூலமே போதைப்பொருள் கடத்தலையோ பாதாள உலகத்தையோ அடக்க முடியும் என எவரேனும் நினைத்தால் அது வெறும் நிகழ்ச்சி என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்து விடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டு விடுவது உலக யதார்த்தம். நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி

இயலாது என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக்கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### இலங்கை அரசும் சிங்கள அமைப்புகளும்

# கனடிய அரசியலுக்கு அஞ்ச ஆரம்பித்துவிட்டன

அ.நிக்ஸன்

புலம்பெயர் தேசங்களில் தமிழ்த் தேசியத்தை இலக்காகக் கொண்ட ஈழத்தமிழ் அமைப்புகளின் பலத்தை அறிந்த ஒரு பின்னணியிலேதான், சிங்கள அரசியல் தலைவர்கள் பிரித்தானியா, அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் குறிப்பிட்ட சில தமிழ் அமைப்புகளையும் தனிநபர் குழுக்களையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் என்பது பட்டவர்த்தனமாகும். ஈழத்தமிழர்கள் அனைவரும் இலங்கை அரச கட்டமைப்புக்குள் இணைந்து வாழத் தயார் என்ற பொய்யான பரப்புரையின் ஊடாக புலம்பெயர் தமிழர்கள் பெருமளவில் வாழும் கனடா போன்ற நாடுகளில் கணக்கைக் காண்பிக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வட அமெரிக்க நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தக்குத் தடை விதிக்கப்பட்டு, அத் தடை கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அமெரிக்காவிலோ கனடாவிலோ தமிழீழ விடுதலைப் புலிகளில் உறுப்பினராக இருந்த ஒருவர் அதைக் கூறி அரசியல் தஞ்சம் கோரினால் அவருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படமாட்டாது.

அவ்வாறான ஒருவர் விடுதலைப் புலிகளில் இருந்து விலகியபின் அல்லது விலக்கப்பட்டபின் கூட அவர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்கினால் அல்லது விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்களுக்கு மட்டுமே கனடாவில் அதுவும் நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் புகலிட அந்தஸ்து வழங்கப்படுவது வழமை.

ஆனால், ஐரோப்பிய நாடுகளில் நிலைமை அவ்வாறில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளில் அங்கம் வகித்து ஆனால், கருத்துநிலையை மாற்றாமல் இருக்கும் பலருக்கும் அகதி அந்தஸ்து வழங்கப்படுவது வழமையாகும்.

பிரித்தானிய அரசு புலிகளுக்குத் தடை விதித்திருந்தாலும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அங்கு தொடர்ந்தும் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால், கனடாவில் அவ்வாறானதொரு சூழல் இன்றுவரையும் இல்லை.

இதனால், புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களிடையே கனடாவின் தடை அரசியல் பற்றிய கடுமையான விமர்சனம் இருந்துவருகிறது. 2006ஆம் ஆண்டு கொன்ஸர்வேடிவ் கட்சியின் ஸ்-ரீபன் ஹார்ப்பர் பிரதமராகி இரண்டு மாதங்களுக்குள், அதுவும் பேச்சுவார்த்தைக் காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை கனேடிய அரசு முதன்முதலாக அமுல்படுத்தியது.

கனடாவில் தடை விதிக்கப்படுவதற்கு ஏழு வருடங்களுக்கு முன்னர், 1997இல் அமெரிக்கா விடுதலைப் புலிகள் மீது தடையை விதித்து இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுத்துவந்தது என்பது இங்கு ஒருசேர நோக்கப்படவேண்டியது.

புலம்பெயர் ஈழத்தமிழர்களின் வாக்குகளைப் பெற விழையும் தேர்தல் காலங்களின் போதெல்லாம் ஈழத்தமிழர்களின் கடுமையான அதிருப்தி குறித்து கனேடிய பிரதான கட்சிகள் அறிந்திருப்பதால், இலங்கை அரசு மீதும் தாம் அழுத்தம் தருவதாக, அல்லது தர இருப்பதாக பாவனை செய்வதும் சில அழுத்தங்களை மேற்கொள்வதும் வழமை.

எந்த ஹார்ப்பர் அரசாங்கம் 2009ஆம் ஆண்டுக்கும் முன்னர் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்ததோ அதே ஹார்ப்பர் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2013ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் தான் கலந்துகொள்ளாது புறக்கணித்து தமிழ் மக்களிடையே நற்பெயரையும் அதேவேளை, இலங்கையில் அமெரிக்காவுக்குத் தேவையான ஆட்சி மாற்றத்தை உருவாக்கும் அரசியலுக்கும் ஊக்கம் கொடுத்தார்.

கனடாவில் தற்போது லிபரல் கட்சி தலைமையிலான ஆட்சி நடைமுறையில் இருக்கிறது. அதன் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீடித்து வருகிறார். இந்தத் தடையை நீடிக்கும் அதேவேளை, ஈழத்தமிழர் இன அழிப்புக்கு நீதி கோருவது போன்ற பாவனையையும் ஆங்காங்கே வெளிப்படுத்திவருகிறார்.

இவ்வாறு, கனடாவில் புலம்பெயர் ஈழத்தமிழர் மனநிலையைப் புரிந்துகொண்டு இந்த இரண்டு பிரதான கட்சிகளும் இன அழிப்புக்கு நீதி கேட்பது போன்ற தேர்தல் அரசியற் பாவலாவைக் காட்டிவருகின்றன. இதனை ஈழத்தமிழர்களும் தகுந்தமுறையில் பயன்படுத்திக்கொள்ள ஓரளவுக்காவது ஆரம்பித்துவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

குறிப்பாக, இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்கள் மீது இன அழிப்பு நடந்துள்ளது என்றும் அதற்குச் சர்வதேச நீதி வேண்டும் என்றும் புலம்பெயர் தமிழர்கள் தமது அரசியல் தரப்புகளுக்கு ஊடாக முன்வைக்கப்பட்ட தீர்மானம்கனேடிய பாராளுமன்றில் அனைத்துக்கட்சி ஆதரவுடனான தீர்மானமாக வெளிப்பட்டது மட்டுமல்ல, 2022ஆம் ஆண்டிலிருந்து மே 18 தமிழ் இன அழிப்பை நினைவுகூரும் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டும் உள்ள சூழலும் தோன்றியுள்ளது.

ஈழத்தமிழர்கள் மீது தடை விடயத்தில் கடுமையாக இயங்கிய கனடா ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற அனுமதித்தது எதற்காக, இன அழிப்பு நினைவேந்தலை அங்கீகரித்தது எதற்காக என்று அங்கு மிகச் சிறிய அளவிலேனும் குடியேறி வாழும் சிங்களத் தரப்பினர் ஆத்திரமடைந்து கேள்வி எழுப்பிவருகின்றனர். அதேவேளை, சட்ட நடவடிக்கைகளைச் சவாலாக முன்னெடுத்தும் வந்துள்ளனர்.

கனடாவின் பிரபலமான நகரமாகவும் பெருமளவு ஈழத்தமிழர் வாழுகின்ற பகுதியாகவும் ரொறன்ரோ விளங்கும் போதும், அந்த நாட்டின் தலைநகரான ஒட்டாவாவில் இலங்கை அரசின் தூதராலயமும் குறைந்தளவில் என்றாலும் தாக்கம் செலுத்தக்கூடிய அளவில் சிங்கள சமூகமும் காணப்படுகின்றன.

இந்தச் சிங்கள அமைப்புகள் இன அழிப்பு என்ற கருத்தியலுக்கு கனேடிய அரச அங்கீகாரம் கிடைப்பதை எதிர்க்கின்றன. கனடாவைத் தொடர்ந்தும் இலங்கையின் பக்கம் வைத்திருக்கும் செயற்பாடுகளை அவை தீவிரப்படுத்தியுள்ளன.

அண்மையில் இலங்கைத் தீவுக்கு விஜயம் மேற்கொண்ட புலம்பெயர் தனிநபர் க்குழுவான சுரேன் சுரேந்திரன் மற்றும் கனேடிய தமிழர் பேரவை முட்டுக்கொடுக்கும் உலகத்தமிழர் பேரவை என்ற அமைப்பின் செயற்பாடுகளோடு சிங்கள புலம் பெயர் அமைப்பும் முட்டுக்கொடுத்து இயங்கிவருவதற்குக் கனடாவில் வலுப்பெறும் ஈழத்தமிழர் சார்பான அரசியலைத் தடுக்கும் நோக்கம் உள்ளது என்பது வெளிப்படை.

கீழே தரப்படும் சிங்கள அமைப்பின் காணொளி அதற்குச் சாட்சியாகிறது. அதேபோல இலங்கை அரசின் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ வெளியிட்ட இன அழிப்பு செய்தி தொடர்பான கருத்தும் இலங்கை அரசின் இது தொடர்பான பயத்தையும் வெளிப்படுத்துகிறது.

கனடாவில் பாராளுமன்றத் தேர்தல் 2025ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சூழலில், அல்லது அதற்கு முன்னர் திடுமென அவ்வாறு நடைபெறும் சூழல் எப்போது தோன்றினாலும், அதை எதிர்கொள்வதில் தற்போதைய ஆளும் கட்சியான லிபரல் கட்சிக்கு எதிராகப் போட்டியிடக்கூடிய எதிர்க்கட்சித் தலைவரும் கென்சர்வேற்றிக் கட்சியின் பிரதமருக்கான வேட்பாளருமான பியர் பொலியெர்வ் கூட தற்போது ஈழத்தமிழர்களுக்கு நடந்த இன அழிப்புக்குக் கனடா நீதி கோரும் எனக் கூற ஆரம்பித்துள்ளார்.

இது மேலோட்டமாக வாக்கு அரசியலாகத் தெரிந்தாலும் இலங்கை தொடர்பான கனடா அரசின் வெளியுறவுக் கொள்ளையில் ஈழத்தமிழர் மீதான இன அழிப்புக்கான சர்வதேச நீதியைக் கோருதல் என்ற கோரிக்கையின் வகிபாகம் வலுப்பட ஆரம்பித்துள்ளதை நாம் இங்கு கூர்மையாக நோக்கவேண்டும்.

இதை மேலும் செம்மைப்படுத்தும் கடமை அங்குள்ள புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புகளுக்கு உண்டு என்ற கருத்தைக் கனடா வாழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்துகிறார்கள்.

தேர்தல் அரசியலுக்காக இரண்டு கட்சிகளும் ஈழத்தமிழர் மீதான இன அழிப்புத் தொடர்பான கருத்தியலை ஆதரிக்க ஆரம்பித்திருந்தாலும் கனடாவின் வெளியுறவுக் கொள்கையில் இதுவரை இன அழிப்புக்கான நீதி தாக்கம் செலுத்த ஆரம்பிக்கவில்லை என்பதையும் இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

கனேடிய அரசின் ஐ.நா. மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பானவரும் ஒரு காலத்தில் சிங்களத் தரப்போடும் தமிழ்த் தரப்போடும் சமஷ்டி தீர்வுகுறித்து கருத்துத் தாக்கத்தை ஏற்பட்ட முனைந்தவருமான பொப் ரே கனடிய அரசு ஈழத்தமிழர் மீதான இன அழிப்பு என்ற கருத்தியலைத் தனது அதிகாரப்பூர்வ நிலைப்பாடாக இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று 2023 ஆரம்பத்தில் வலியுறுத்தியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கடிதங்கள்

### வீதிக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம்

முதன்மை வீதிகளுக்கு அருகில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம் என பொலிஸார் வலியுறுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்கின்ற வீதி விபத்துகள், வீதியில் கால்நடைகள் உலாவுவதன் காரணமாகவே ஏற்படுகின்றன. இதன் காரணமாக உயிரிழப்புகள் கூட இடம்பெற்றுவரும் நிலையில், கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை முதன்மை வீதிகளுக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம் என்று கோரியுள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட மட்டத்திலும் பிரதேச ரீதியாகவும் நடைபெறுகின்ற கூட்டங்களில் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், கால்நடை வளர்ப்பாளர்கள் தொடர்ச்சியாக தமது கால்நடைகளை முதன்மை வீதிகளுக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

ஏ-9 வீதி, ரயில் தண்டவாளங்கள் ஆகியவற்றிற்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்துகின்றனர். இதன்போது, ஏற்படுகின்ற விபத்துகளில் பெருமளவு கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு கால்நடை வளர்ப்பாளர்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்





# தேயிலைத் தோட்டமும் பெண் தொழிலாளர்களின் நிலையும்



செல்வகுமார் ரினோஷன்
யாழ். பல்கலைக்கழகம் ஊடக கற்கைகள் துறை மாணவன்

விவசாய நாடான இலங்கை பெருந்தோட்ட பயிர்களான தேயிலை, தென்னை, இறப்பர் மூலமே அதிக வருமானத்தை பெற்று வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருமானமானது அவ்வளவு இலகுவாகக் கிடைக்கப்பெறுவதன்று. அதிலும் தேயிலையினால் இலாபம் பெறுவது மிகவும் கடினமாகும். ஆயினும், இலங்கையில் தேயிலையினூடாகவே மலையக பெருந்தோட்ட மக்கள் குறைந்த சம்பளத்தில் வாழ்வாதாரம் ஈட்டி வருகின்றனர்.

இலங்கை தேயிலை ஏற்றமதியாளர்கள் சங்கம் (Tea Exporters Association Srilanka) குறிப்பிடுவதன் படி, 1 கிலோகிராம் தேயிலையின் விற்பனை பெறுமதி 2023 மே மாதத்திற்கு 1,055.45 அதாவது 3.43 டொலர் ஆகும். ஜனவரி தொடக்கம் ஜூலை மாதத்துக்கு இடையில் 155.82 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் நாளாந்த வாழ்வாதாரத்தினை பெற பல்வேறு இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அதிலும் 50ற்கு அதிகமாகப் பெண்களே பணிபுரிகின்றனர். அதன்படி இவர்கள் எவ்வாறான இன்னல்களோடு வாழ்வாதாரம் ஈட்டி வருகின்றனர் என பார்ப்போம்.

தேயிலைத் தோட்டங்களில் அட்டைக் கடியும், விலங்கு தாக்குதலும் இவர்கள் தினசரி எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும் ஒன்று.

இது தொடர்பாக 39 வயதுடைய பெண் தோட்ட தொழிலாளி தெரிவிக்கையில், 'எந்தநாளும் குறைஞ்சது 30 அட்டைக்கு மேல கடிக்கும். அதுக்காக மருந்து பாவிச்சாலும் மழையில கரைஞ்சிறும். அப்போ நூத்து கணக்கான அட்டை கடியில் இருந்து தப்புரதே பெரிய விசியம். சில மனுசங்கதா எங்க ரத்தத்த குடிக்கிறாங்கனா இந்த அட்டைகளும் எங்க உதிரத்த குடிக்கிறது எங்க சாபம்' என தெரிவித்தார்.

மேலும், சில தொழிலாளர்கள் தெரிவிக்கையில், 'அட்ட கடிக்கு மருந்தா, சவர்க்காரம், உப்பு பாவிப்போம். அப்படி பாவிக்கிறதால சிலருக்கு ஒத்துக்காது. இதுக்கு கடையில 100 ரூபாய்க்கு மருந்து வாங்குனா அது ஒரு கிழமைக்குதான். அப்படி மாசத்துக்கு ஒருநாள் சம்பளத்துல பாதி போயிரும் ரூநரழவ் என்றனர். எனினும் தமது வாழ்வாதாரத்திற்காக இவற்றை எல்லாம் துச்சமாக வேலை செய்கின்றனர். அடுத்ததாக தேயிலைத் தோட்டங்கள் காடுகளாக இருப்பதால் இவர்கள் விலங்குகளுடனும் போராட வேண்டியுள்ளது. இதனை 43 வயதுடைய பெண் தெரிவிக்கையில், (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) "தேயிலை தோட்டதுல சிலவேளை குளவி கலைஞ்சி துரத்தி வரும் . சில நேரம் தேயிலைல இருக்கது தெரியாம கொழுந்து எடுக்கும் போது குளவிகள் தாக்கும். அதனால எத்தனையோ பேர வைத்தியசாலைல சேத்துருக்கோம்" என்றார்.

மேலும், தொழிலாளர்கள் குறிப்பிடுகையில், "சில சமயங்களில் பன்றி, சிறுத்தை தங்களைத் துரத்தி வரும்போது பாதுகாத்துக்கொள்ளக் கல்லும் முள்ளுமான காட்டு வழியில் அதற்கு சமனாக ஓட வேண்டும். அதோடு, பாம்புகள் கீழே இருப்பதை அறியாது மிதித்து விட தங்களைத் தாக்கும் வாய்ப்புள்ளது. அயல் தோட்டத்தில் இதற்கு இலக்காகிய 45 வயதுடைய பெண் பல மாதங்கள் சிகிச்சை பெற்றதாகத் தெரிவித்திருந்தார்கள். இதிலிருந்து தங்களைப் பாதுகாத்து வாழ்வாதாரம் ஈட்ட தோட்ட நிர்வாகம் என்ன விதமான பாதுகாப்பு செய்திருந்தாலும் அவை எல்லாம் இவ் விலங்குகளுக்கு சொற்பமே" என்றனர்.

இதன்படி, மாதத்திற்கு ஒரு பெண் தொழிலாளராவது பாதிக்கப்படாமல் இருப்பது அரிது. இருந்தும் இவற்றையெல்லாம் வாழ்வாதாரத்திற்காக கடந்தாக வேண்டும் இது தொடர்பாகத் தோட்ட மேற்பார்வையாளர் குறிப்பிடுகையில், "தொழிலாளர்களுக்கான அட்டை மருந்து கொடுப்பதோடு, விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள விழிப்புணர்வுகளும் கொடுக்கின்றோம்.மக்களே தோட்ட நிர்வாகத்திடம் மக்களே தங்களின் கோரிக்கைகளைக் கூற வேண்டும்" என்றார். ஆனால், இதுகுறித்து மக்களின் நிலைப்பாடு வேறுபாடாகின்றது.



### தேயிலை தோட்டமும் சூழலியல் பாதிப்பும்

வாழ்வாதாரத்திற்காக மேற்குறிப்பிட்ட இன்னல்களைச் சகித்துக்கொள்வதுடன், எழில் கொள்ளும் சூழலினால் ஏற்படும் பாதிப்புகளையும் எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக 41 வயதான வ.நிர்மலா என்ற பெண் கூறுகையில், "சில நேரம் கூரான முள்ளு கால்ல குத்திரும் அத தாங்கிட்டுதா அன்னைக்கு முழு நாளும் சமாளிக்கனும். வேலை செய்யும்போது, மரம் முறிஞ்சி விழும் அந்த நேரத்துலயும் எங்க உயிர காப்பாத்திக்க ஓடனும். ஒரு கனம் அசந்தாலும் உயிர் போயிரும்" என்கின்றார்.

தொழிலாளர்கள் இதனை தெரிவிக்கையில், அந்த அடை மழையிலும் 8-5 மணி வரை 20 கிலோகிராம் தேயிலை எடுத்தால் மட்டுமே ஒரு நாள் சம்பளம் கிடைக்கும். கடுமையான இடி, மின்னல், மழையென பார்க்காமல் வேலை செய்வது கட்டாயமாகும். கடுமையான காற்று வீசும் நேரங்களில் 20 கிலோகிராம் கொழுந்துடைய கூடையுடன் வழுக்கி விழுந்து அடிபட்ட சந்தர்ப்பங்களை கூறியிருந்தார்கள். இதனாலே மழைக்காலங்களில் செருப்பு அணிவதில்லை.

தோட்ட மேற்பார்வையாளர் கருத்துப்படி, "தக்க நேரத்தில் அவர்களுகான விடுமுறைகள் தருவதோடு, தோட்ட கம்பனிகளின் முடிவுகளே மக்களின் தேயிலை அளவை தீர்மானிக்குமென்றார்". இருப்பினும், இவ்வற்றை எல்லாம் தாண்டியே குறைந்த வறுமானத்தில் வாழ்வாதாரம் பெறுவதாக தொழிலாளர்கள் அறியத்தந்தனர்.

தேயிலைத் தோட்டமும் அத்தியாவசிய வசதியும். இயற்கையும் இவர்களுக்கு வாழ்வாதாரத்திற்குத் தடையாக இருப்பதுபோல் செயற்கையான தொழிலாளர் உரிமையும் மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. தொழிலாளர்கள் உரிமையின்படி வேலை நேர வசதிகள் இருக்க வேண்டும். ஆனால், இவர்களுக்கு அத்தியாவசிய வசதிகள் கூட இல்லாத நிலையிலேயே பணிபுரிகின்றனர். இது தொடர்பில் 37 வயதுடைய பெண்ணொருவரை வினவியபோது, (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) "எங்களுக்கு மழைக்கு ஒதுங்க கூட எந்த இடமும் இல்ல. மழையோ வெயிலோ அந்த மலையிலேயே வேலை செய்யனும். நாங்க சாப்பிடுறதுக்கு வீட்டுக்கு போக முடியாது. இங்க சாப்புடவும் இடமில்லை. இதனால வீதியிலேயே உக்காந்து தினமும் சாப்டனும். அதுவும் மழை நாள்னா நாங்க நனைஞ்சிட்டு அட்டைய பிடுங்கி வீசிட்டு மறுகையில சாப்டனும். அப்போ சாப்பிடவே விருப்பம் இருக்காது" என்றார்.

இதுகுறித்து பெண் தொழிலாளர்கள் கூறுகையில், "நாங்கள் பெண் என்றதால் மாதவிடாய் மற்றும் சுகாதார, அவசர தேவைகளுக்குக் கூட மலசலக்கூடங்கள் இல்லாத நிலையைச் சந்திக்கிறோம். மயக்கம் வருமாயின் ஓய்வு அறை இன்றி வீதிகளிலும் காடுகளிலுமே ஓய்வு பெறும் நிலை உள்ளது" என கூறினார்கள்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டிலேயும் குறைந்த வாழ்வாதாரத்திற்காக அதிக இன்னல்படும் சமூகமாக இன்றுவரை இருந்து வருகின்றது என்பதற்கு இதுவே சாட்சியாகும். ஆனால், தோட்ட நிர்வாகம் மக்கள் கோரிக்கை தரும் பட்சத்தில் நிறைவேற்றுவோம் என்று மட்டுமே கூறினார்கள்.

அத்துடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையில் வாழ்வாதார நெருக்கடிகள் உக்கிரமடைந்துள்ளது. இலங்கை தேயிலை மொத்த உற்பத்தியில் நலிவடைந்து விட்டது. இதன் பிரதான காரணம் பசளை தட்டுப்பாடாகும். இதன்போது விளைச்சல் அற்ற நிலையில், 20 கிலோகிராம் உற்பத்தி செய்வது கடினமானது. இதேவேளை, உக்ரைன்-ரஷ்ய போரினால் தேயிலை ஏற்றுமதியும் வீழ்ச்சியடைய பெருந்தோட்ட குடிகளின் வாழ்வாரத்தில் திண்டாட்டம் ஏற்பட்டது. காலப்போக்கில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையும் பண வீக்கமும் இம்மக்களின் வறுமானத்தை சீர்குலைத்தது.

தொழிலாளர்களின் சவால்கள் குறித்து பொதுநல அதிகாரி (Welfare Officer (Welfare Officer) கூறுகையில், "மக்களுக்கான பாதுகாப்பு ரெயின் போரஸ்ட் திட்டத்தின்படி, சீராகச் செய்து வருகிறது. குளவிகள், விலங்கு தாக்குதல் தொடர்பாக விழிப்புணர்வுகளையும் செய்து வருவதோடு, அத்தியாவசிய வசதிகளையும் சீராக பராமரிக்குமிடத்து அதனையும் செய்து தரப்படும் என கூறினார். இவ்வாறு நிர்வாகம் கூறினாலும் மக்களின் நிலைப்பாடு வேறானவையேயாகும்.

இந்த உரிமையைக் கோரும் மக்களின் குரலாக ஆசிரியரும் சமூக ஆர்வளருமான எப்.ஸ்டன்லி குமார் குறிப்பிடுகையில், "தொழிலாளர்கள் உரிமை என்பது இலங்கையின் மலையகத்தில் மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. சோசலிசம் என்பதைத் தாண்டி ஆரம்ப இராஜகாரிய முறைமை முதல் இன்றுவரை அடிமைகளாகவே உள்ளனர். 1991 தனியார் கூட்டு ஒப்பந்தம் தொடக்கம் இன்று வரை அரசாங்கம் வெறும் பார்வையாளராகவே இருக்கின்றது. இதுவே இவர்களின் போராட்ட நிலைக்குக் காரணமாகும்.

தமது குறைந்த வாழ்வாதாரத்தைப் பெற நிர்வாகத்தோடு போராடும் இடைவிடாது உழைக்கும் சமூகமாக இன்றுவரை உள்ளது. தேயிலையை நம்பாத தொழிலதிபர்கள் இதனால் வாழ்வாதாரம் ஈட்ட இதனையே நம்பியுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது.

இவர்களுக்கான ஜனநாயகம், சமூக சமத்துவம், வாழ்வாதார உயர்வு, உரிமைகள் இருக்கின்றதா என்ற கேள்விக்கு நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் விடை வகுத்துக்கொள்ள வேண்டும். இந்த இன்னல்கள் ஒழித்து வாழ்வாதாரம் மேலோங்கத் தேயிலைத் தோட்டங்கள் தனி உரிமை அல்லது அரசுடமையாக்க வேண்டும். காணிகளுக்கு உரிமை வழங்க வேண்டும். படித்த சமூகம் அமுக்கக் குழுக்களாகச் செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலமே இம்மக்களின் வாழ்வாதாரத்தை ஒளிரச்செய்ய முடியும்" என்றார்.

# அப்பாவின் கைபேசி



தெட்சணாமூர்த்தி கரிதரன் (சம்பூர் சமரன்)

"தம்பி எண்ட போஃன காணல எங்கேயும் கண்டதா காணவேயில்ல" என்று மூர்த்தி அவரது மகனை நோக்கி கேட்ட வண்ணம் பதட்டத்துடன் காணப்பட்டார். "இல்லையே அப்பா நான் காணயில்ல, நீங்க தானே காலையில கடலுக்கு போறப்ப எடுத்து தா எண்டு சொல்ல நான் சாஜர்ல இருந்து கழட்டி தந்தனே" என்று கரன் பதிலளித்தான்.

"அப்போ கடலில தான் எண்ட போஃன் கிடக்கும் போல நான் பார்த்திட்டு வாறன், யாராவது எடுத்துட்டு போயிடுவாங்க" என்று கூறியபடி மூர்த்தி தனது சைக்கிளை எடுத்து வேகமாக மிதித்து கடலை நோக்கி சென்றார். மூர்த்தி இவ்வளவு பதற்றப்படுவதற்கு நிறைய காரணங்கள் உண்டு. அந்த கைபேசி அவரது வெளிநாட்டில் வசிக்கும் மகன் அனுப்பி வைத்தது கைபேசி. கைக்கு கிடைத்து ஆறு மாதங்கள் கடந்து விட்டன. எனினும், அதனை மூர்த்தி புதிய கைப்பேசி போலவே வைத்திருந்தார். தன்னுடைய பிள்ளை போலவே அதை பராமரித்து வந்தார். அந்த கைபேசியில் அவருக்கு தெரிந்தது சிவப்பு மற்றும் பச்சை நிற பொத்தான்களே. தனது மகனுடன் பேசுவதற்கு தனக்கு கிடைத்த வரப்பிரசாதமாகவே அதை நினைத்தார். வெளிநாட்டில் உள்ள அவரது மூத்த மகன் அங்கு சென்று நான்கு வருடங்கள் ஆகின்றன. இன்னும் அவர் தாய் நாட்டிற்கு வரவே இல்லை.

மூர்த்தி சைக்கிளின் வேகத்தை இன்னும் கூட்டிக்கொண்டு கடலை நோக்கி விரைந்தார். அவரது மனமோ புயல் காற்றில் அலைந்து பறக்கும் காய்ந்த சருகுகளை போலானது. "கடவுளே யாராவது அந்த போஃனை எடுத்து இருந்தா நான் எப்படி மகனோட கதைப்பன், மீன்கார முதலாளியும் இப்ப மிஸ்கோல் அடிச்சிருப்பார், பாப்பமே எங்க போகப்போகுது கரையில தான் கிடைக்கும்" என்று மனதுக்குள்ளே சமாதானமும் சொல்லிக்கொண்டே கடற்கரையை அடைந்தார். அங்கே மிகவும் அமைதியான சூழ்நிலை நிலவியது. மீன் வாங்குவதற்காக கொஞ்ச நேரத்திற்கு முதல் கூடிய கூட்டம் இப்போது கலைந்து அவர்கள் விட்டுச்சென்ற பாதத் தடங்கள் அங்கும் இங்கும் முட்டி மோதி கலவரம் செய்து ஓய்ந்திருந்தன.

மூர்த்தி கடல் அலையின் ஓசையைக் கூட காதில் வாங்காது தனது கைபேசி ஒலிக்கும் சத்தத்தை எங்கேயும் கேட்க மாட்டோமா? என்று கண்கள் இரண்டும் பந்துகள் போல சுழன்று நான்கு திசைகளையும் நோட்டம் விட்டன. நேரம் செல்லச் செல்ல இனம் புரியாத பயம் மூர்த்தியின் உள்ளத்தில் பாறாங்கல்லாக கனத்தது. வெயிலும் அன்று கடுமையாகவே இருந்தது. சுடுகின்ற மணல் கால்களைத் தடவிக் கொண்டாலும் மூர்த்திக்கு அது எவ்வித கஷ்டத்தையும் கொடுக்கவில்லை.

மூர்த்தியின் கண்கள் கலங்கின நாக்கு வரண்டது, கரையில் இழுத்து வைத்திருந்த அவரது தோணியை உற்றுப் பார்த்தார், சுற்றி எங்கும் பார்த்தார் பலனில்லை. கீழே விழுந்து கிடந்த சைக்கிளை தூக்கி நிமிர்த்தினார். நேரே வீட்டிற்குச் சென்று உள்ளே நுழைந்தார். தனது கைபேசியின் அழைப்பு மணியோசை காதில் விழுந்ததை கேட்டு வெளியே வந்து தேடினார். ஆனால் கைபேசி அங்கு இல்லை. அது அவரது மனபிரமை. மூர்த்தியின் மனம் வேதனையில் தவித்தது.

"அப்பா கடலுக்கு போனீங்களே போஃன் கிடந்ததா? யாரும் எடுத்துட்டு போய்ட்டாங்களா..." என்று கரன் கேட்டான். மூர்த்தி எதுவுமே பேசவில்லை அவரின் முக வாட்டத்தை கரன் கணித்து கொண்டான். அதனால் அவன் பதிலை எதிர்பார்க்கவில்லை. அப்பாவின் கவலையை உணர்ந்தவனாக அவ்விடத்தை விட்டு விலகினான். கரன் தன்னுடைய பங்கிற்கு கடலுக்கு சென்று அப்பாவின் சைக்கிள் வைக்கப்பட்ட இடம் மற்றும் வலைகள் குவிக்கப்பட்ட குடில் போன்ற இடங்களில் தேடினான். கைபேசி கிடைக்கவேயில்லை, ஏமாற்றத்துடன் பொது மைதானத்துக்கு சென்று அன்று மாலை விளையாடி விட்டு இருட்டியதும் வீட்டுக்கு வந்தான். அந்நேரம் மூர்த்தி ஆழ்ந்த யோசனையில் வீட்டு விறாந்தையில் இருந்தார். கரனால் அவருக்கு ஆறுதல் சொல்ல மனம் வரவில்லை. அம்மாவிடம் சென்று அப்பாவின் மனநிலை பற்றி கேட்டுக் கொண்டான்.



அன்றிரவு இருவர் தங்கள் உறக்கத்தைத் தொலைத்திருந்தனர். அது தந்தையும் மகனுமே. அதிகாலையில் கடலுக்கு தொழிலின் நிமிர்த்தம் செல்வதால் மூர்த்தி நேரத்தோடு உறங்கி விடுவார். ஆனால், இன்று நித்திரை வரவில்லை வெளிநாட்டில் இருக்கும் தனது மகன் அழைப்பை தனது கைப்பேசிக்கு ஏற்படுத்தி இருப்பான் பதில் கிடைக்காததால் பதறியிருப்பான் என்று எண்ணிக்கொண்டு அலையில் மிதக்கும் ஓடமாக நினைவுகள் தத்தளித்தன. பாசத் தவிப்பும் கூடியது. கரனும் அன்று நித்திரையை விரும்பவில்லை, அப்பாவிற்கு எப்படியும் கைபேசியை கண்டு பிடித்து கொடுக்க வேண்டும் இல்லாவிடில் புதியதை வாங்கி கொடுக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான். தந்தையும் மகனும் இவ்வாறு சிந்தனையின் ஓட்டத்தில் தவித்தாலும் நித்திரை அவர்களை விடவில்லை மெதுவாக அவர்களை ஆட்கொண்டது.

சேவல் கூவும் முன்பே மூர்த்தி எழுந்தார். கடலுக்கு எடுத்துச் செல்கின்ற பொருட்களை எல்லாம் இரவே அவரது மனைவி எடுத்து வைத்திருந்தாள். மனைவி ஊற்றிக் கொடுத்த தேநீரை மட மடவென சூட்டையும் பொருட்படுத்தாது குடித்து விட்டு அவசரமாக புறப்பட்டார். அதே நேரத்தில் கரனும் எழுந்து விட்டான். அம்மாவிடம் தேநீரை வாங்கி குடித்துவிட்டு "நானும் இண்டைக்கு வரப்போறேன்" என்று கூவிக்கொண்டே அப்பாவின் பின்னே சைக்கிளை வேகமாக நகர்த்திக் கொண்டு பின் தொடர்ந்து சென்றான்.

கடலுக்கு செல்லும் வழியில் அமைதியாக எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லாமல், இருவரும் நடந்து கொண்டிருந்தனர். குருவி கத்தும் சத்தமும், இடையிடையே தெருவில் நாய்கள் குரைக்கும் சப்தங்களும் இறுகிய மனங்களை கலையச் செய்தன. இருவருமாக கடற்கரையை அடைந்ததும், அவர்கள் தோணியில் மீன் பிடிப்பதற்கான உபகரணங்களை வைத்து விட்டு தமது குல தெய்வத்தை நினைத்துக்கொண்டு தந்தையும் மகனுமாக மெது மெதுவாக தோணியை நகர்த்தினார்கள். கரனின் காலில் ஏதோ ஒரு மரத்துண்டு மிதிபடுவதைப் போல உணர்ந்தான். அதையும் பொருட்படுத்தாது அப்பாவின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்துவிட்டு தோணியைத் தள்ளினாள். பின்னர் கடல் நீரில் கால்களை நனைத்து விட்டு கரையை திரும்பி பார்த்தான், அங்கே அவன் கால்கள் மிதித்த இடத்தில் ஒளி வீசுவதை கண்டான் அது என்னவாக இருக்கும் என்று விரைவாகச் சென்று அந்தப் பொருளை தூக்கிப் பார்த்தான்.

என்ன! ஆச்சரியம் அவன் கண்களை அவனே நம்பவில்லை, மண்ணில் புதைந்த அவனது அப்பாவின் கைபேசியே தான் அது. மகிழ்ச்சியில் திளைத்தவனாய், அந்த கைபேசியில் உள்ள மண்ணை தட்டுவதற்கு கூட அவகாசம் இல்லாமல் அப்பாவை அழைத்தான். "அப்பா! அப்பா! உங்கட போஃன் இந்தா கிடக்குது பா, யாருமே எடுக்கல தோணிக்கு கீழதான் இருந்திருக்கு" என்று கூறினான். மூர்த்தியும் சற்று நிதானித்தவராக தோணியை அவ்விடத்தே விட்டு விட்டு வேகமாக நடந்து வந்தார். கரனின் கையிலே தனது கைபேசியை கண்டதும், கண்கள் அகல விரிய தனது கைபேசியைப் பார்த்து ஆனந்தத்தில் கண்ணீர் வடிந்து கவலை தோய்ந்த முகத்துடன் மகனைப் பார்த்தார். மகனும் தந்தையைப் பார்த்தான் இருவரின் கண்களிலும் நிம்மதியின் ஒளி தென்பட்டது. மூர்த்தி நிம்மதிப் பெருமூச்சு விட்டார். எரிமலையாய் எரிந்து, நீரில் விழுந்த பூச்சியாய் மனம் ஆறுதல் இன்றி தவித்து இருந்தது. இப்போது அந்த மனம் அமைதிக்குத் திரும்பியது. கரனின் மன வாட்டமும், மூர்த்தியின் மன தவிப்பும் ஒன்றாக அடங்கும் தருணம் மூர்த்தியின் கைபேசியிலிருந்து தவறிய அழைப்பின் ஓர் அறிவித்தல் கடல் அலையின் சத்தத்தில் கரைந்தது...

மும்பை

# 11 இடங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

மும்பையில் உள்ள ரிசர்வ் வங்கி அலுவலகம், ஹெச்டிஎஃப்சி வங்கி மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிகளில் வெடிகுண்டுகள் வைக்கப்படும் என்றும் ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் மற்றும் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் ஆகியோர் இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் மிரட்டல் மின்னஞ்சல் வந்துள்ளது.

இதேபோல் மும்பையில் மொத்தம் 11 இடங்களில் வெடிகுண்டு மிரட்டல்கள் வந்ததால் பொலிஸார் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.




புது டெல்லி

## கடும் பனிமூட்டம்

வட இந்தியாவில் கடுங்குளிர் நிலவி வருகிறது. பனிமூட்டம் அதிக அளவில் காணப்படுவதால் எங்குப் பார்த்தாலும் புகைமூட்டம் போன்று காட்சியளிக்கிறது.

எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவிற்குப் பனிமூட்டம் தரைப்பகுதியில் படர்ந்துள்ளது.

தலைநகர் புதுடெல்லி மட்டுமல்லாமல் உத்தரப்பிரதேசம் ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களிலும் பனிமூட்டம் அடர்ந்து காணப்படுகிறது. பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் எதிரே உள்ளவர்களைப் பார்க்க முடியாது அளவிற்குப் பனிமூட்டம் சூழ்ந்துள்ளது.

மிகவும் அதிக அளவில் பனிமூட்டம் அடர்ந்து காணப்படும் என இந்திய வானிலை மையம் டெல்லிக்கு "ரெட் அலர்ட்" பிறப்பித்துள்ளது.

டெல்லியில் 25 மீட்டருக்கும் குறைவான தூரத்தைக் கூட பார்க்க முடியாத நிலையில் இருப்பதால் 25க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன. டெல்லி விமான நிலையத்திற்கு வந்து சேரும், 110 விமானச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநில சாலைகளில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாத வகையில் பனிமூட்டம் சூழ்ந்துள்ளதால் பல விபத்துகள் ஏற்பட்டுள்ளன.



தெலங்கானா

## வில்லியாக மாறிய "நல்லி"



தெலங்கானா மாநிலத்தில் பரவலாக இந்து திருமணங்களிலும் அசைவ உணவு பரிமாறப்படுகிறது. இதனை ஓர் அந்தஸ்தாகக் கருதுகின்றனர். ஆதலால், திருமணம் முடிந்ததும், தடபுடலாகப் பல வகை அசைவ உணவுகள் பரிமாறப்படுகின்றன.

இந்நிலையில், தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத்தை சேர்த்த பெண்ணுக்கும், ஜகத்தியாலா பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் கடந்த நவம்பர் மாதம் பெண் வீட்டில் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. அப்போது, பெண் வீட்டார் நிச்சயதார்த்த விழாவிற்கே அசைவ உணவு வகைகளைப் பரிமாறியுள்ளனர்.

ஆனால், இந்த கறி விருந்தில், நல்லி எலும்பு பரிமாறப்பட வில்லை எனும் வாதம் மாப்பிள்ளை வீட்டார் பக்கத்தில் எழுந்துள்ளது. இது மெல்ல பரவி, பெண் வீட்டாரின் காதுகளுக்கு எட்டியது. இதனால், இரு வீட்டாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் நிலவி, இறுதியில் அது கை கலப்பில் கொண்டு போய் விட்டு விட்டது.

இது குறித்து சிலர் பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்ததால், பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து, இரு வீட்டாரையும் அழைத்துப் பேசி அனுப்பி வைத்தனர். ஆனால், இச் சம்பவத்தால், மனம் உடைந்ததாகவும், அவமானம் ஏற்பட்டதாகும் கூறி, மாப்பிள்ளை விட்டார் நடக்கவிருந்த திருமணத்தை நிறுத்தி விடுவதாக அறிவித்துள்ளனர்.

பெண் வீட்டாரும், இந்த திருமணத்திற்கு நாங்களும் ஒப்புக்கொள்ள மாட்டோம் என அறிவித்துள்ளனர். நல்லி எலும்பால் ஒரு திருமணமே நின்று போகும் காட்சிகள், சமீபத்தில் வெளியான 'பலகம்' எனும் தெலுங்கு சினிமாவில் இருந்தது. அது இந்த சம்பவத்தால் உண்மையாகி விட்டது என பலர் கருத்து கூறி வருகின்றனர்.

ரஷ்யா

# ரஷ்ய போர்க்கப்பலை அழித்த உக்ரேன்

உக்ரேன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா தனது இராணுவ படைகளை அனுப்பி தாக்குதலை ஆரம்பித்தது. இந்தப் போரில் உக்ரேன் இராணுவத்திற்கு இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவிகளை செய்து வருகின்றன.

மேலும் ரஷ்யாவிடம் போரில் இழந்த சில பகுதிகளை உக்ரேன் இராணுவம் மீட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவின் போர்க் கப்பலை அழித்துள்ளதாக உக்ரேன் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, உக்ரேனின் விமானப்படைத் தளபதி எக்ஸ் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், "டிசெம்பர் 26 அன்று உள்ளூர் நேரப்படி அதிகாலை 03.47 மணிக்கு உக்ரேனிய விமானிகள் ரஷ்ய கடற்படையின் நோவோசெர்காஸ்க் என்ற பெரிய போர்க் கப்பலை அழித்தனர். ரஷ்யாவின் கடற்படை சிறியதாகி வருகிறது. விமானப்படை விமானிகளுக்கு நன்றி" என பதிவிட்டுள்ளார்.



பாகிஸ்தான்

### பாகிஸ்தான் பொதுத்தேர்தலில்

## முதன்முறையாக இந்து பெண் போட்டி

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் போட்டியிடுவதற்காக, கைபர் பக்டுங்க்வா மாகாணத்தின் புனேர் மாவட்டத்தைச் சேர்ந்த சவேரா பிரகாஷ் என்ற இந்து மதத்தைச் சேர்ந்த பெண் முதல் முறையாக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

சவேரா பிரகாஷின் தந்தை ஓம் பிரகாஷ் ஓய்வு பெற்ற மருத்துவர் ஆவார். இவர் பாகிஸ்தான் மக்கள் கட்சியில் கடந்த 35 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வருகிறார். தனது தந்தையை பின்பற்றி அரசியலில் நுழைய முடிவு செய்ததாகவும், தேர்தலில் வெற்றி பெற்றால் பெண்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக பணியாற்றுவேன் எனவும் சவேரா பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

காசா

## "முன் எப்போதும் இல்லாத போரை எதிர்கொள்கிறோம்"

ஹமாஸ் அமைப்புக்கும், இஸ்ரேலுக்குமான போர் 2 மாதங்களைக் கடந்து நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் அதன் தலைவர் யாயா சின்வர் என கூறப்படுகிறது. போர் குறித்து அவர் முதன்முறையாக கருத்து தெரிவித்துள்ளார். அதில், "ஹமாஸின் இராணுவப் பிரிவான அல் கஸ்ஸாம், கடுமையான, முன் எப்போதுமில்லாத போரை எதிர்கொள்கிறது. இஸ்ரேல் பாதுகாப்புப் படையை நசுக்கும் பாதையில் அல் கஸ்ஸாம் உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களிடம் ஹமாஸ் ஒருபோதும் அடிபணியாது என்றார்.

### பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராட்டம்




அவுஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராடுகின்றன.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, ட்ரெவிஸ் ஹெட்டை சிறிது நேரத்தில் ஷகீன் ஷா அஃப்ரிடியிடம் இழந்தது. பின்னர் மர்னுஸ் லபுஷைனை 63 ஓட்டங்களுடன் ஆமிர் ஜமாலிடம் இழந்த அவுஸ்திரேலியா, அலெக்ஸ் காரியை அப்ரியிடம் இழந்தது.

மிற்செல் ஸ்டார்க்கை சிறிது நேரத்திலேயே மிர் ஹம்ஸாவிடம் இழந்தது.

பின்னர் 41 ஓட்டங்களுடன் மிற்செல் மார்ஷும் ஹம்ஸாவிடம் வீழ்ந்ததோடு, அணித்தலைவர் பற் கமின்ஸ் ஜமாலிடம் வீழ்ந்ததோடு, நேதன் லையன் ஹஸன் அலியிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து 318 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் அவுஸ்திரேலியா பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே இமாம்-உல்-ஹக்கை நேதன் லையனிடம் இழந்தது.

பின்னர் இணைந்த அப்துல்லா ஷஃபிக்கும், அணித்தலைவர் ஷண் மசூட்டும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், ஷஃபிக் 62 ஓட்டங்களுடனும், அடுத்து வந்த பாபர் அஸாமும் கமின்ஸிடம் வீழ்ந்தனர்.

54 ஓட்டங்களுடன் லையனிடம் மசூட் விழ, சௌட் ஷகீல் ஜொஸ் ஹேசில்வூட்டிடம் வீழ்ந்தார். பின்னர் கமின்ஸிடம் அக்ஹா சல்மான் விழ நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றுள்ளது. களத்தில் மொஹமட் றிஸ்வான் ஆட்டமிழக்காமல் 29 (34) ஓட்டங்களுடனும், ஆமிர் ஜமால் இரண்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

## 40களிலும் விளையாட விரும்பும் ஜோக்கோவிச்



அண்மைய எதிர்காலத்தில் ஓய்வு பெறும் எவ்வித திட்டங்களையும் கொண்டிருக்காத 36 வயதான நொவக் ஜோக்கோவிச், தனது 40களைத் தாண்டி தனது விளையாடும் காலத்தை நீடித்து அமெரிக்க கால்பந்தாட்ட ஜாம்பவானான டொம் பிராடியைப் போல ஆக விரும்புவதாகக் கூறியுள்ளார். தேசிய கால்பந்தாட்ட லீக்கில் 23 பருவகாலங்களாக விளையாடிய பிராடி, தனது 45ஆவது வயதில் இவ்வாண்டு ஆரம்பத்திலேயே ஓய்வு பெற்றிருந்தார். இந்நிலையில் உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரரான ஜோக்கோவிச், தனது 22ஆவது பருவகாலத்தை ஆரம்பிக்கவுள்ளார்.



### புத்தளம் மர்ஹூம் ஜனாப் ஞாபகார்த்த வெற்றி கிண்ணத் தொடர்:

# சம்பியனானது லிவர்பூல்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் விம்பிள்டன் கழகத்தின் முன்னாள் வீரர் மர்ஹூம் ஜனாப் ஞாபகார்த்தமாக புத்தளம் நகரில் நடைபெற்ற கால்பந்தாட்டத் தொடரில் புத்தளம் லிவர்பூல் கழகம் சம்பியனானது.

லெஜன்ட்ஸ் கழகத்தின் பூரண அனுசரணையில் நடைபெற்ற புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 12 அணிகளுக்கு இடையிலான அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியானது புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றபோது யுனைட்டெட் அணியை பெனால்டியில் வென்றே லிவர்பூல் சம்பியனானது.

இறுதிப் போட்டியின் வழமையான நேர முடிவில் இரண்டு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையிலிருந்த நிலையில், பெனால்டியில் 3-2 என்ற ரீதியில் வென்றே லிவர்பூல் சம்பியனானது.

இத்தொடரின் சிறந்த கோல் காப்பாளராக போல்டனின் முனாசிர் தெரிவானதோடு, சிறந்த வீரராக லிவர்பூலின் பவாஸ் தெரிவானார்.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 12 அணிகளும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் வெற்றி பெற்ற நான்கு அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்கு முன்னேறின.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் த்ரீ ஸ்டாரை 1-0 என்ற கோல் கணக்கில் வென்று லிவர்பூலும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் போல்டனை 1-0 என்ற கோல் கணக்கில் வென்று யுனைட்டெட்டும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.

### தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## 245 ஓட்டங்களைப் பெற்ற இந்தியா




தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், செஞ்சூரியனில் நேற்று முன்தினம் ஆரம்பமான முதலாவது டெஸ்டில் நேற்றைய இரண்டாம் நாள் ஆரம்பத்தில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 245 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

துடுப்பாட்டத்தில், லோகேஷ் ராகுல் 101, விராட் கோஹ்லி 38, ஷ்ரேயாஸ் ஐயர் 31, ஷர்துல் தாக்கூர் 24, யஷஸ்வி ஜைஸ்வால் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ககிஸோ றபாடா 5, நன்ட்ரே பேர்கர் 3, மார்கோ ஜன்சன் மற்றும் ஜெரால்ட் கொயட்ஸி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

### முதலாவது இருபதுக்கு-20

## நியூசிலாந்தை வீழ்த்திய பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், நேப்பியரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்: நாணயச் சுழற்சி: பங்களாதேஷ் நியூசிலாந்து: 134/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜேம்ஸ் நீஷம் 48 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 3/26 [4], மஹெடி ஹஸன் 2/14 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 2/15 [4], ரிஷாட் ஹொஸைன் 1/24 [3]) பங்களாதேஷ்: 137/5 (18.4 ஓவ.) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் ஆ.இ 42 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 1/16 [4], மிற்செல் சான்ட்னெர் 1/16 [4], ஜேம்ஸ் நீஷம் 1/7 [1]) போட்டியின் நாயகன்: மஹெடி ஹஸன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 28 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.